www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com

**12**ஆம் வகுப்பு.

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019
## வணிகவியல் (விடைகளுடன்)

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

(1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** மேலாண்மை என்பது ---------- ன் செயலாகும்.

அ) மேலாளர் ஆ) கீழ்பணியாளர்
இ) மேற்பார்வையாளர் ஈ) உயர் அதிகாரி

**2.** அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்

அ) ஃபோயல் ஆ) டெய்லர்
இ) மேயோ ஈ) ஜேக்கப்

**3.** பின்வருவனவற்றுள் எது முக்கிய செயல்பாடு அல்ல?

அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல்
இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணிக்கமர்த்துதல்

**4.** ________ உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.

அ) முதுகலை வணிக மேலாண்மை
ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) குறி இலக்கு மேலாண்மை
ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

**5.** மூலதனச்சந்தை என்பது ________ க்கான ஒரு சந்தையாகும்.

அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தரக் கால நிதி
இ) நீண்ட கால நிதி ஈ) ஏதுமில்லை

**6.** NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1990 ஆ) 1992
இ) 1998 ஈ) 1997

**7.** பணச்சந்தை வழங்குவது

அ) நடுத்தர கால நிதிகள்
ஆ) குறுகிய கால நிதிகள்
இ) நீண்ட கால நிதிகள்
ஈ) பங்குகள்

**8.** நம் நாட்டில் ________ பங்குச் சந்தைகள் உள்ளன.

அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

**9.** இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1988 ஆ) 1992
இ) 1995 ஈ) 1998

**10.** பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளர்களுக்கு உதவுவது ________ ஆகும்.

அ) பரஸ்பர நிதி ஆ) பங்குகள்
இ) கடனீட்டுப் பத்திரங்கள் ஈ) நிலை வைப்புகள்

**11.** மனிதவளம் என்பது ஒரு ________ சொத்து.

அ) கண்ணுக்கு புலனாகும்
ஆ) கண்ணுக்கு புலனாகா
இ) நிலையான ஈ) நடப்பு

**12.** விளம்பரம் என்பது ஒரு ________ ஆட்சேர்ப்பு வளமாகும்.

அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள்
இ) முகவர் ஈ) புறத் திறனீட்டல்

**13.** தேர்வு பொதுவாக ஒரு ________ செயலாகக் கருதப்படுகிறது.

அ) நேர்மறை ஆ) எதிர்மறை
இ) இயற்கை
ஈ) இவற்றில் எதுவும் இல்லை



orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**14.** தொழிற்சாலைக்குள் பயிற்சி எங்கு வழங்கப்படுகிறது?

அ) வேலையிடத்தில் ஆ) அறையில்

இ) பயிற்சி திணைக்களத்தில்

ஈ) குழுவினால்

**15.** பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

அ) விற்பனையாளர்

ஆ) சந்தையிடுகையாளர்

இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

**16.** சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை

அ) முற்றுரிமை முறை

ஆ) பணத்திற்கு மாற்றுதல்

இ) பண்டமாற்று முறை

ஈ) தற்சார்பு உற்பத்தி

**17.** கீழ்க்கண்டவற்றுள் சந்தைப்படுத்தப்படாத சொத்துகள் எவை?

அ) அரசு பத்திரங்கள்

ஆ) பொதுத்துறை நிறுவனங்களின் பிணையங்கள்

இ) தேசிய சேமிப்பு பத்திரங்கள்

ஈ) பட்டியலிடப்பட்ட நிறுமத்தின் பங்குகள்

**18.** தவறான கூற்று எது?

அ) பணிக்கு பொருத்தமான நபர்களை மற்றும் தேர்ந்தெடுப்பது பணிக்கமர்த்தல் ஆகும்.

ஆ) ஒரு மேலாளர் நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்.

இ) செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.

ஈ) திட்டமிடுதல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியும்.

**19.** கீழேகொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?

அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு

இ) திட்டக்கூறு ஈ) விலை கூறு

**20.** தரகர்கள் பங்குச்சந்தையில் ஈடுபடுவது

அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக

ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக

இ) மற்ற தரகர்களுக்காக

ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7 × 2 = 14**

**21.** மேலாண்மை என்றால் என்ன?

**22.** திட்டமிடுதல் என்றால் என்ன?

**23.** குறியிலக்கு மேலாண்மை என்றால் என்ன?

**24.** நிதிச்சந்தை குறிப்பு வரைக.

**25.** OTCEI - குறிப்பு வரைக.

**26.** அரசுப்பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?

**27.** பங்குச்சந்தை வரைவிலக்கணம் தருக.

**28.** செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.

**29.** மனிதவள மேலாண்மை என்றால் என்ன?

**30.** நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7 × 3 = 21**

**31.** டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?

**32.** இயக்குதலின் முக்கியத்துவம் என்ன?

**33.** குறி இலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.

**34.** இரண்டாம் நிலைச்சந்தை – சிறுகுறிப்பு வரைக.

**35.** மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் யாவை? விளக்கம் தருக.

**36.** வணிக இரசீதின் வகைகளை விவரி.

**37.** காளை மற்றும் கரடி விளக்குக.

**38.** செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.

**39.** மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன?

**40.** மனோபாவச் சோதனை என்றால் என்ன?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35**

**41.** மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?

(அல்லது)

சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரிக்கவும்

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**42.** சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரிக்கவும்

(அல்லது)

மேலாண்மையின் முக்கிய பணிகளைக் கூறி விளக்குக.

**43.** குறியிலக்கு மேலாண்மையில் ஈடுபட்டுள்ள செயல்முறைகள் யாவை?

(அல்லது)

பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

**44.** நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரிக்கவும்.

(அல்லது)

பணியமர்த்தல் கொள்கைகளை விளக்குக.

**45.** ஆட்சேர்ப்பின் பல்வேறு முறைகளை விளக்குக.

(அல்லது)

நிதிச்சந்தையின் பல்வேறு வகைகளை விவரிக்க.

**46.** அரசுப் பத்திரங்களின் இயல்புகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக.

(அல்லது)

செபியின் அதிகாரங்களை விவரிக்கவும்

**47.** மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

(அல்லது)

பங்குச் சந்தையினால் சமுதாயத்திற்கான பயன்களை விவரிக்கவும்.

## விடைகள்

### பகுதி - I

**1.** அ) மேலாளர்
**2.** ஆ) டேய்லர்
**3.** அ) முடிவெடுத்தல்
**4.** இ) குறி இலக்கு மேலாண்மை
**5.** இ) நீண்ட கால நிதி
**6.** ஆ) 1992
**7.** ஆ) குறுகிய கால நிதிகள்
**8.** அ) 21
**9.** அ) 1988
**10.** அ) பரஸ்பர நிதி
**11.** ஆ) கண்ணுக்கு புலனாகா
**12.** ஆ) புற வளங்கள்
**13.** ஆ) எதிர்மறை
**14.** இ) பயிற்சி திணைக்களத்தில்
**15.** ஆ) சந்தையிடுகையாளர்
**16.** இ) பண்டமாற்று முறை
**17.** இ) தேசிய சேமிப்பு பத்திரங்கள்
**18.** ஈ) திட்டமிடுதல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியும்.
**19.** இ) திட்டக்கூறு
**20.** ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக

### பகுதி - II

**21.** ஒரு வணிக நிறுவனத்தின் மேலாண்மை செய்பவர்கள் மற்றும் விசயங்களை நிர்வகிப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட வழி மேலாண்மை என்று அழைக்கப்படுகின்றது.

**22.** (i) திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும். திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.

(ii) திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

**23.** ஒரு அமைப்பில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் திறம்பட மற்றும் சுய ஈடுபாட்டுடன் பங்கு வகிக்கும் ஒரு நிர்வாக முறையே குறியிலக்கு மேலாண்மை (MBO) ஆகும்.

**24.** எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துக்கள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகள் வியாபாரம் செய்யப்படுகின்றதோ அதுவே 'நிதிச் சந்தை' எனப்படுகிறது.

**25.** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும். இதன் மூலம் முதலீட்டாளர் மற்றும் நிறுமத்திற்கு சில பிரச்சனைகள் இருந்த போதும் வெளிப்படைத் தன்மை, விரைவான முடிவு, நெகிழ்வு தன்மை ஆகிய நன்மைகளையும் அளிக்கிறது.

**26.** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

**27.** "பத்திரங்கள் ஒப்பந்தச் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1956-படி பங்கு மாற்றகம் என்பது பங்குப் பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல்,

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



அவற்றைச் சீர்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத அமைப்பு சங்கம் அல்லது தனி நபர்களின் அமைப்பாகும்.

**28.** (i) **பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்கு முறை :** செபியின் முதல் நோக்கம் பங்குச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவதாகும்.

(ii) **முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு** முதலீட்டாளர்கள் இல்லாத நிலையில் மூலதனசந்தை அர்த்தமற்றதாகும்.

**29.** (i) மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.

(ii) மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.

**30.** நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும். இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு (IQ) போன்றவற்றை சோதிக்க பயன்படும். நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது. அந்நபரின் அறிவார்ந்த திறனை சோதிப்பது இதன் முதன்மை நோக்கமாகும்.

## பகுதி - III

**31.** திரு.டேலர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள்.

(i) அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல.

(ii) இணக்கம், சச்சரவின்மை.

(iii) மனப்புரட்சி.

(iv) தனிமனிதத் தத்துவம் அல்ல , ஒத்துழைப்பு.

(v) ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி.

**32.** (i) தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புப்படுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

(ii) அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள், செய்தி மடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூல மாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

**33.** (i) குறுகிய கால இலக்குகளுடன் நிறுவனத்தின் நீண்டகால இலக்குகளை இணைக்க குறியிலக்கு மேலாண்மை முயற்சி செய்கிறது.

(ii) சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்த முயற்சி செய்கிறது.

(iii) குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டும் அடையச் செய்வதல்ல, திறமையான செயல்திறனையும் அடையச் செய்கிறது.

(iv) இது அனைத்து நிலைகளிலும் இலக்குகளை அடைவதற்கான அமைப்பின் திறனை அதிகரிக்கச் செய்கிறது.

(v) குறியிலக்கு மேலாண்மை மூலம் ஊழியர்களுக்கு அதிகபட்ச ஊக்கம் மற்றும் திருப்தி கிடைக்கச் செய்கிறது.

**34.** (i) இரண்டாம் நிலைச் சந்தை ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

(ii) இரண்டாம் நிலைச் சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

**35.** **மூலதனச் சந்தையின் வகைகள் :** மூலதனச் சந்தை பின்வரும் வரைபடத்தின்படி முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முதல் நிலைச் சந்தை, இரண்டாம் நிலைச் சந்தை.

**முதல் நிலைச் சந்தை Primary Market:**

(i) முதல்நிலைச் சந்தை என்பது புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும். ஆகையால் இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.

(ii) முதல் நிலைச் சந்தை பொதுமக்களுக்கு முதன்முதலில் வெளியிடும் பத்திரங்களை கையாளுகிறது.

(iii) முதல் நிலை சந்தையில் கடனாளிகள் நீண்டகால நிதிக்காக புதிய நிதி பத்திரங்களை மாற்றம் செய்து கொள்கின்றனர்.

**இரண்டாம் நிலைச் சந்தை Secondary Market:**

(i) ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை என வரையறுக்கப்படுகிறது.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(ii) ஏற்கனவே முதல் நிலைச் சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள் இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.

(iii) இது பங்கு மாற்றகம் உடனடி மாற்றகம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

**36.** (i) **தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்:**
தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.

(ii) **தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்:** பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள் ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.

(ii) **தனித்துவமான இரசீதுகள் :** தனித்துவமான இரசீதுகள் என்பது வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல் உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

**37.** **காளை *(Bull)***

(i) பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா (Tejiwala) என்றழைக்கப்படுகிறார்.

(ii) ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்த வகை ஊகவணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார்.

(iii) இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் (Optimism) என்ற மனப்பாங்கு கொண்டவர்.


**கரடி *(Bear)***

(i) கரடி அல்லது மண்டிவாலா (Mandiwala) என்றழைக்கப்படும் ஊக வணிகர், எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர்.

(ii) ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.அதேபோல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

(iii) ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு (Pessimism) கொண்டவர்.

**38.**




**39.** (i) தொழில்துறை உறவுகள் மனித வளத்தை சார்ந்துள்ளது.

(ii) மனித வளங்கள் மூலமாக மட்டுமே மனித உறவுகள் சாத்தியமாகிறது.

(iii) மனித வளமானது பிற அனைத்து உற்பத்தி காரணிகளையும் நிர்வகிக்கிறது.

(iv) பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் மனித வளங்களின் திறனை மேம்படுத்த முடியும்.

(v) மேலாண்மையின் அனைத்து மட்டங்களிலும் மனித வளத்தைப் பயன்படுத்த முடியும்.

(vi) மனித வளங்கள் சட்டப்பூர்வ கட்டமைப்பினால் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

**40.** மனோபாவச் சோதனை என்பது குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட உதவுகிறது. இச்சோதனை பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும் பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது. இச்சோதனை பின்வரும் திறன்களை அளவிட உதவுகிறது.

(i) எண் திறன் தேர்வு.
(ii) வாய்மொழி திறன் தேர்வு.
(iii) காரணமறிதல் திறன் தேர்வு.
(iv) பொறியியல் திறன் தேர்வு.
(v) விளக்க வரைபட தேர்வு.
(vi) உணருதல் திறன் தேர்வு.
(vii) சூழ்நிலைக்கேற்ற தீர்வு காணும் ஆற்றல் தேர்வு.
(viii) மனக்கணிதத் திறன் ஆய்வுத் தேர்வு.
(ix) சொல் அகராதி ஆய்வுத் தேர்வு.
(x) எண் தொடர் ஆய்வுத் தேர்வு

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



## பகுதி - IV

**41.** (i) பீட்டர் டிரக்கரின் கூற்றுப்படி, மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும், மேலாண்மை செய்கிறது.

(ii) பீட்டர் டிரக்கர் தனது வரைவிலக்கணத்தில் மேலாண்மையின் மூன்று பணிகளை முக்கியத்துவம் (அ) அழுத்தம் தந்துள்ளார். அவைகளாவன:

- வணிகத்தை மேலாண்மை செய்தல்
- மேலாளரை மேலாண்மை செய்தல்
- பணியாளர்களையும், பணியையும் மேலாண்மை செய்தல்

(iii) இதில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும், எவ்வித செயலையும் மேலாண்மை செய்ய இயலாது, மேலும் வணிக நிறுவனத்தையோ அல்லது தொழில் சமூகத்தையோ நிர்வகிக்க இயலாது.

(iv) பீட்டர் டிரக்கர் என்பவர் கூற்றுப்படி ஒரு மேலாளர் மேற்கூறிய மூன்றையும் திறமையாக சமன் செய்து, ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.

(v) எனவே ஒவ்வொரு வணிகத்திலும் அதன் மேலாளர் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவராகவும், வியாபாரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் செயல்படுகிறார்கள். திறம்பட்ட, செம்மையான மேலாண்மை இல்லாமல், மனித வளங்களையும், பொருட்களையும், நிதி வளங்களையும், திறமையாக ஒதுக்கீடு செய்யவும் மற்றும் முழுமையாகப் பயன்படுத்தவும் இயலாது.

**(அல்லது)**

**சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சியின் நிலைகள் :**

(i) **பண்டமாற்று முறை:** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொண்டார்கள், வேறு எந்த வித மாற்றுக்களும், இதில் மேற்கொள்ளப்படவில்லை குறிப்பாக, பணம்.

(ii) **உற்பத்தி சார்ந்து:** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு சிறிய அளவிலான முக்கியத்துவமே இக்காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது.

(iii) **விற்பனை சார்ந்து :** இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது. விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

(iv) **சந்தையிடுகை சார்ந்து :** வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்று தீர்ப்பதில் மட்டுமே, அதிக போட்டி இருந்து வந்துள்ளது. மேலும், தனியாள் விற்பனை மற்றும் அதிக அளவினை விற்பனை மேம்பாடு, போன்றவற்றை விற்பனை ஊக்கிகளாக பயன்படுத்தப்படுகிறது.

(v) **நுகர்வோர் சார்ந்து:** இந்த நிலையில் மட்டுமே மேம்படுத்தப்பட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் அவைகள் நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் வகையில் சுவை, விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

(vi) **மேலாண்மை சார்ந்த :** சந்தையிடுகை ஒரு மேலாண்மை பணியினை மேற்கொள்கிறது அதாவது இன்றைய நுகர்வோரின் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடல், பொருள் மேம்பாடு செய்தல் மற்றும் வினியோகம் செய்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**42.** பல்வேறு அணுகுமுறையின் அடிப்படையில் சந்தையை பகுதிகள், பொருட்களின் இயல்பு மற்றும் பொருளாதார பார்வை, பரிமாற்றம், ஒழுங்குமுறை, காலம், அளவு மற்றும் முக்கியத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் சந்தை வகைப்படுத்தப்படுகிறது.

**புவியியல் அடிப்படையில் :**

(i) குடும்ப சந்தை
(ii) உள்ளூர் சந்தை
(iii) தேசிய சந்தை
(iv) பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை

பண்டகங்களின்/பொருட்களின் அடிப்படையில் :

**அ. பண்டக சந்தை**

(i) உற்பத்தி பொருள் மாற்று சந்தை
(ii) தயாரிப்பு பொருள் மாற்று சந்தை
(iii) சூரிய உலோகச் சந்தை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**ஆ. மூலதன சந்தை**

(i) பண சந்தை
(ii) அந்நிய செலாவணி சந்தை
(iii) பங்கு சந்தை

**பொருளாதாரத்தின் அடிப்படையில் :**

(i) முறையான சந்தை
(ii) முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை

**நடவடிக்கைகளின் அடிப்படையில் :**

(i) களச்சந்தை
(ii) எதிர்கால சந்தை

**ஒழுங்குமுறை அடிப்படையில் :**

(i) ஒழுங்குமுறை சந்தை
(ii) ஒழுங்குமுறையற்ற சந்தை

**காலத்தின் அடிப்படையில் :**

(i) மிக குறுகிய கால சந்தை
(ii) குறுகிய கால சந்தை
(iii) நீண்ட கால சந்தை

**தொழில் அளவின் அடிப்படையில் :**

(i) மொத்த விற்பனை சந்தை
(ii) சில்லறை விற்பனை சந்தை

**முக்கியத்துவத்தின் அடிப்படையில் :**

(i) முதன்மை சந்தை
(ii) இரண்டாம் நிலை சந்தை
(iii) இறுதிநிலைச் சந்தை

**(அல்லது)**

திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், பணிக்கமர்த்துதல், இயக்குதல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவை மேலாண்மையின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

(i) **திட்டமிடுதல் :** திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும். திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது. திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

(ii) **ஒழுங்கமைத்தல் :** ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதும், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல்முறையே ஒழுங்கமைத்தல் (ஏற்பாடு செய்தல் அல்லது ஏற்படுத்துதல்) ஆகும்.

(iii) **பணிக்கமர்த்துதல் :** பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை பணிக்கமர்த்துதல் உள்ளடக்கியுள்ளது. பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது, பழைய நபர்களுக்கு ஓய்வு அளிப்பது, அனைத்து நபர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வது மற்றும் பணியாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவது ஆகியன பணிக்கமர்த்துதலில் அடங்கியுள்ளது.

(iv) **இயக்குவித்தல் :** தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்க மளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

(v) **கட்டுபாடு காத்தல் :** ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கும் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் கட்டுப்படுத்துதல் செயல்பாடு பயன்படுகிறது.

(vi) **ஒருங்கிணைத்தல் :** அனைத்து தனிநபர்களுடைய செயல்களின் ஒத்திசைவு (அல்லது ஒற்றுமை அல்லது ஒருங்கிணைத்தல்), பல்வேறு திறன்கள் உள்ள தனிநபர்கள் நிறுவனத்தில் பணிபுரிதல் ஆகியன பொது நோக்கங்களில் மிகவும் வெற்றிகரமான சாதனை படைக்க வழிவகுத்துச் செல்லும். ஒவ்வொரு நிர்வாக செயல்பாடுகளும் ஒருங்கிணைத்தலில் உள்ளடங்கியுள்ளது

**43. குறியிலக்கு மேலாண்மையின் செயல் முறைகள்:**

(i) **அமைப்பின் குறிக்கோள்களை வரையறுத்தல் :** தொடக்கத்தில், ஒரு அமைப்பின் உயர்நிலை ஊழியர்களால் அமைப்பின் குறிக்கோள்கள் கட்டமைக்கப்படுகின்றன. முதலாவதாக, நீண்ட காலக் குறிக்கோள்கள் கட்டமைக்கப்படுகிறது. பிறகு, குறுகிய கால குறிக்கோள்களைக் கட்டமைத்து நீண்டகால குறிக்கோள்களை அடைவதற்கான சாத்தியக் கூறுகளை கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

(ii) **ஒவ்வொரு பிரிவின் இலக்குகள் :** ஒவ்வொரு பிரிவின் குறிக்கோள்களும், அமைப்பின் ஒட்டுமொத்த குறிக்கோள்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(iii) **முக்கிய முடிவு பகுதிகள் :** அமைப்பின் குறிக்கோள்களின் அடிப்படையில் முக்கிய முடிவுப் பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. முக்கிய முடிவுகள் பகுதிகள் (Key Result Areas - KRA) முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்படுகிறது.

(iv) **குறிக்கோள்களுடன் வளங்களை ஒப்புநோக்குதல் :** கிடைக்கக்கூடிய வளங்களின் அடிப்படையில் குறிக்கோள்கள் கட்டமைக்கப்படுகின்றன. சில வளங்கள் (தொழில்நுட்ப ஊழியர்கள் அல்லது மூலப்பொருள் பற்றாக்குறை) போதுமானதாக இல்லை என்றால், அமைப்பின் குறிக்கோள்கள் அதற்கேற்றபடி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

(v) **காலவாரியான மறுஆய்வுக் கூட்டம் கூட்டுதல் :** உயர்நிலை ஊழியர்கள் மற்றும் கீழ்நிலை ஊழியர்கள் சந்திக்கும் வகையில் காலவாரியான கூட்டங்களை நடத்தவேண்டும். அக்கூட்டங்களில் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றத்தைப் பற்றி விவாதிக்கப்பட வேண்டும்.

(vi) **செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்:** குறிக்கோள்களை அடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால முடிவில் உயர்நிலை ஊழியர்கள் மற்றும் கீழ்நிலை ஊழியர்களுக்கு இடையே கலந்துரையாடல் நடைபெற வேண்டும். கீழ்நிலை ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அத்தகைய பிரச்சினைகளை சமாளிக்கக்கூடிய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**(அல்லது)**

**பொருளாதாரத்தின் அடிப்படையில் :**

(i) **முறையான (செம்மையான) சந்தை :**

இவ்வகை சந்தையில் ஒரே இயல்பான தன்மைகொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையின் அடிப்படையில் கையாளப்படுகிறது. இந்த சந்தை கீழ்காணும் நிபந்தனைகளை கொண்டுள்ளது.

- அதிக எண்ணிக்கை உள்ள வாங்குவோர் மற்றும் விற்போரை கொண்டுள்ளது.
- பொருட்களின் விலை சந்தை முழுவதும் ஒரே சீராக இருத்தல்.
- வாங்குவோர் மற்றும் விற்போர் சந்தையை பற்றி தெளிவாக அறிந்திருத்தல்.
- பொருட்கள் தங்கு தடையின்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு வழிவகை செய்கிறது.

(ii) **முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை :**

இவ்வகை சந்தை பல்வகை பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலைகொண்ட பொருட்கள் இச்சந்தையில் மேற்கொள்ளப்பட மாட்டாது. கீழ்கண்ட செயல்பாடுகளின் அடிப்படையில் இத்தகைய சந்தை செயல்படுகிறது அவற்றை காணலாம்.

1. பொருட்கள் ஒத்த தன்மை இன்மை
2. விலையில் ஏற்ற தாழ்வு
3. தகவல் தொடர்பில் குறைபாடு
4. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதில் உள்ள தடைகள்.

**44. நவீன மேலாண்மையின் கோட்பாடுகள்:**

நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படும் திரு.ஹென்றி போயல் ஒவ்வொரு மேலாளரும் நிறுவனத்தின் வெற்றிக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய 14 பிரதான கோட்பாடுகளை வரையறுத்திருக்கிறார். அவைகளாவன.

(i) **வேலைப் பகிர்வு :** இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும். தொழிலாளர் ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில் முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்க வேண்டும்.

(ii) **அதிகாரமும், பொறுப்பும்:** அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

(iii) **ஒழுங்குமுறை :** இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும். இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(iv) **பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்.** நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும். எனவே தனிப்பட்ட நபர்களின் தனிநலனை விட தொழில் நிறுவனத்தின் நோக்கமே அனைத்தையும் விட மேம்பட்டிருக்க வேண்டும்.

(v) **ஊதியம் :** ஊதியம் என்பது பணியாளர் களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். பணியாளருக்கு கொடுக்கப்படும் ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மையான ஊக்குவிப்பவனாக இருந்து உற்பத்தியை அதிகரிப்பப்பதால் அவர்களுக்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**(அல்லது)**

ஒரு ஊழியர் நியமனம் செய்யும்போது பின்வரும் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) **முதலில் வேலை, அடுத்து மனிதர்:** பணியின் தேவைக்கேற்ப பணியாளர் வேலையில் அமர்த்தப்பட வேண்டும். வேலைக்கு தேவைப்படும் விண்ணப்பதாரர் மற்றும் அவரது தகுதியில் எவ்விதமான சமரசமும் இருக்கக்கூடாது. "முதலில் வேலை அடுத்து மனிதர்" என்பது வேலைவாய்ப்பு கொள்கைகளாக இருக்க வேண்டும்.

(ii) **வேலை வாய்ப்பு:** புதிய ஊழியர்க்கு தகுதிக்கு அதிகமான அல்லது குறைவான வேலை வழங்கப்படக்கூடாது. தகுதியை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும்.

(iii) **விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:** பணி தொடர்பாக பணியிடத்தில் நிலவும் விதிமுறைகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை பணியாளர் பரவலாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(iv) **அபராதங்கள் பற்றிய விழிப்புணர்வு:** ஊழியர் தவறு செய்தாலோ அல்லது அவரால் ஏதேனும் இழப்பு ஏற்பட்டாலோ அதன் காரணமாக அவருக்கு வழங்கப்படும் தண்டனை மற்றும் அபராதம் குறித்த விழிப்புணர்வினை அவர் பெற்றிருக்க வேண்டும்.

(v) **விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு:** பணியாளர்கள் பணியமர்த்தும் போது அவருக்குள் விசுவாசம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வினை வளர்க்கும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர் வேலை மற்றும் நிறுவனம் குறித்த அவரது பொறுப்புகளை சிறப்பாக உணர்ந்து கொள்ள இயலும்.

**45.** ஒரு நிறுவனம் தமக்கு தேவையான பணியாளர்களை தேர்ந்தெடுக்க இரண்டு வழிகள் உள்ளன. அவையாவன

(i) அக வளங்கள் மற்றும்

(ii) புற வளங்கள். புற வளங்களை மேலும் நேரடி மற்றும் மறைமுக வளங்கள் என இரண்டு வகைப்படுத்தலாம்.

**அக வளங்கள் :** இடமாற்றம், மேம்படுத்துதல், பதவி உயர்வு, பதவி இறக்கம், பழைய ஊழியர்களின் பரிந்துரை, வேலை சுழற்சி, ஓய்வு பெற்ற ஊழியர்கள், சார்ந்தவர்கள் முந்தைய விண்ணப்பதாரர்கள், கையகப்படுத்துதல் மற்றும் சேர்க்கை.

**புற வளங்கள் :**

(i) **நேரடி வளங்கள்** – விளம்பரங்கள், பரிந்துரையல்லாத விண்ணப்பதாரர்கள், நேர்முகத் தேர்வு, வளாக தேர்வு, தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு, போட்டி நிறுவனங்கள் மற்றும் இணையவழி ஆட்சேர்ப்பு.

(ii) **மறைமுக வளங்கள்** - பணியாளர் பரிந்துரை, அரசு / பொது வேலைவாய்ப்பு அலுவலகங்கள், வேலைவாய்ப்பு முகவர்கள், வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள், தொழில்முறை சங்கங்கள், பதிலாயனுப்புதல், வாய் வார்த்தை, பணியாளர் ஒப்பந்ததாரர்கள், வேலைவாய்ப்பு, இணையதளங்கள், புறத்திறனீட்டல், மற்றும் புறம்பான வேட்டை.

**(அல்லது)**

நிதிச் சந்தைகளை பல்வேறு வழிகளில் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு:

**(அ)** நிதி கோருதல் வகையின் அடிப்படையில்

(i) கடன் சந்தை

(ii) சமநிலை பங்குச் சந்தை

**(ஆ)** நிதி கோருதலின் முதிர்வு அடிப்படையில்

(i) பணச்சந்தை

(ii) மூலதனச் சந்தை

**(இ)** நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில்

(i) முதல் நிலைச் சந்தை

(ii) இரண்டாம் நிலைச் சந்தை

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

**(ஊ)** நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில்

(i) ரொக்கம் அல்லது உடனடிச் சந்தை

(ii) முன்னோக்கிய அல்லது எதிர்கால சந்தை

**(உ)** நிதிச் சந்தை அமைப்பின் அடிப்படையில்

(i) பரிமாற்றக வர்த்தகச் சந்தை

(ii) உடனடி சந்தை.

**46.** அரசு பத்திரங்களின் இயல்புகளை விரிவாக பின்வருமாறு பார்க்கலாம்.

(i) **முகமைகள் AGENCIES :** மத்திய அரசு, மாநில அரசுகள், அரசாங்க அமைப்புக்கு இணையான அமைப்புகள் போன்ற அதாவது உள்ளூர் அரசு அமைப்புகள் உதாரணமாக நகராட்சிகள், மாநகராட்சிகள், துறைமுகங்கள் போன்ற தன்னாட்சி அமைப்புகள், மற்றும் பிற அமைப்புகள் போன்ற முகவர்களின் மூலம் அரசு பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

(ii) **இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி RBI SPECIAL ROLE :** இந்திய ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக பண மேலாண்மையில் சிறப்பாக செயல்படுகிறது.

(iii) **பத்திரங்களின் இயல்பு NATURE OF SECURITIES :** அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகவும் மேலும் அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

(iv) **பணப் புழக்க விபரம் LIQUIDITY PROFILE:** தங்க முனை பத்திரங்கள் பல வகை நீர்மை தன்மை கொண்டவை. அதன்படி மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மை தன்மை கொண்டதால் அதன் பணப்புழக்கமும் அதிகமாக இருக்கும்.

(v) **வரிவிலக்கு TAX REBATE :** முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு அளிப்பது இந்த அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இந்த பத்திரங்கள் இந்த நன்மைக்காகவே மிகவும் பிரபலமானதாக உள்ளது.

**(அல்லது)**

(i) **பங்குச்சந்தைகள் மற்றும் இடைத் தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்:** பத்திர வணிகத்தை மேற்கொள்ளும் பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் செபி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

(ii) **நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்:** மூலதனசந்தை இடைத் தரகர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தங்கள் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(iii) **பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது:** செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஒரு அதிகாரம் உண்டு. உதாரணமாக, இது பல்வேறு இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் அல்லது முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட விதிகளை அறிமுகப்படுத்தலாம்.

(iv) **பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்:** உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

(v) **பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் :** பங்குச் சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த நிதி அமைச்சகம் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் (ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களை செபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.

(vi) **பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் :** பத்திரச் சந்தை மற்றும் பரஸ்பரநிதியுடன் தொடர்புடைய இடைநிலையர்கள், மோசடியான மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

**47.** மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தின் பல்வேறு காரணிகள் பின்வருமாறு:

(i) **மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல் :** ஒரு நிறுவனத்தில் மனிதவள தேவைகளைத் தீர்மானிப்பது என்பது மிகவும் முக்கியமான ஒரு முதலீட்டு முறையாகும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(ii) **மாற்றங்களை இணைத்துக்கொள்ளல்:** மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்த மாற்றத்தை நிறுவனத்தில் திறன்பட அறிமுகப்படுத்த மனித வள மேலாண்மை ஒரு முகவராக செயல்பட வேண்டும்.

(iii) **மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல் :** மனிதவள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

(iv) **சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல் :** சரியான வேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனிதவள மேலாண்மை உறுதிப்படுத்துவதால், நிறுவனத்தில் குறைதகுதி அல்லது மிகை தகுதி உடைய பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது.

(v) **திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்:** பணியாளா் திறன் மற்றும் அறிவு மேம்பாடு செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மனிதவள மேலாண்மையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதோடு மட்டுமில்லாமல் பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் இன்று வரை இருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

(vi) **பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுதல்:** மனித வள மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பணியாளர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வதால் நன்கு பணிபுரிவோரின் திறனை அதிகரிக்கவும், மெதுவாக பணிபுரிவோர்களை ஊக்கமளிக்கவும் முடிகிறது.

(vii) **போட்டி நன்மைகளை மேம்படுத்துதல்:** நிறுவனங்கள் தகுதிவாய்ந்த மற்றும் போட்டிச் சூழலை எதிர்கொள்ளும் பணியாளர்களை கொண்டிருந்தால் மட்டுமே உலகலாளவிய போட்டிச் சந்தையின் நன்மையை உண்மையில் பெற முடியும்.

**(அல்லது)**

**சமுதாயத்திற்கான பயன்கள் :**

(i) **பொருளாதார வளர்ச்சி:** உற்பத்தித் தேவைகளுக்காக நிலையான சேமிப்புகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை இது துரிதப்படுத்துகிறது.

(ii) **நிதி திரட்டல் தளம்:** இது நன்கு நிர்வகிக்கப்பட்ட, லாபத்தை உருவாக்கும் நிறுவனங்கள் அவ்வப்போது புதிய பங்குகளின் மூலம் வரம்பற்ற நிதியை திரட்ட உதவுகிறது.

(iii) **வளங்களை மாற்றுதல் :** வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி, நிறுவனத்தை செம்மையாக இயக்குவதற்கு வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

(iv) **மூலதன உருவாக்கம் :** இது மூலதன உருவாக்கத்தை ஊக்கப்படுத்துகிறது.

(v) **அரசாங்கத்திற்கான நிதி திரட்டல் :** நிதி பங்குச் சந்தை மீதான பத்திரங்களின் விற்பனை மூலம் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி திரட்ட உதவுகிறது. இதனால் பங்கு பரிவர்த்தனை பொது கடன் உயர்த்துவதற்கான ஒரு தளமாக உள்ளது.

❁❁❁❁❁

orders@surabooks.com PH: 9600175757 /8124201000 / 8124301000

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com